சான்றிதழ்கள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்த யூனியனைப் பிரித்து அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; இதற்கான செயற் குறிப்பு இன்னும் அரசுக்கு வரவில்லை. அரசுக்கு வந்ததும் இது ஆய்வு செய்யப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் ; அமைச்சர் அவர்கள் மூன்று ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கப் போவதாகக் குறிப்பிட்டார்கள். அந்த ஊராட்சி ஒன்றியங்கள் எவை எவை என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : திருவரங்குளம், போகலூர் இந்த இரண்டும், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அறந்தாங்கியைப் பற்றிய கருத்துருவும் அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. ஓ. சுப்பிரமணியன் ; தலைவர் அவர்களே, ஒன்றியங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஜனத் தொகையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டதாக நினைவு. இப்போது பரப்பளவு அதிகமாக் இருக்கிற காரணத்தினால், நிர்வாக சௌகரியத்துக்காகவும், ஜனங்களின் வசதியையும் கருதி பஞ்சாயத்து யூனியன்களைத் திருத்தி அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; உத்தேசம் உண்டு.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை ஊரக வளர்ச்சித் துறைக்கு அனுப்பப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிறது. இருந்தும் இன்னும் அரசுக்கு அந்த கோரிக்கை அனுப்பப்படவில்லை என்று தெரிவிக்கப் பட்டது. எப்போது அரசுக்கு வரும், எப்போது இதன் மீது முடிவு எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அனுப்பப்படுகின்ற கோரிக்கைகளில் சில பல கருத்துக்கள் குறித்து விளக்கமாகக் கேட் பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பியிருக் கக்கூடும். இதனால்தான் கால தாமதம் ஏற்படுகிறது. ஊரக வளர்ச்சித் துறையின் பரிந்துரை அரசுக்கு வந்ததும் இதனை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவிநாசி பேரூராட்சி.

*743 வினா—திரு. சொ. ந. பழனிச்சாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

அவிநாசி பேரூராட்சியை நகராட்சியாக்க ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

1978 மார்ச் 31]

திரு. சொ. ந. பழனிச்சாமி: அவிஞசி பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்திஞல் அங்குள்ள மக்களுக்கு மருத்துவ வசதி, மற்றும் தண்ணீர் வசதி முதலியவை ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதை நகராட்சியாக மாற்ற அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இதற்கு முறைப்படி வர வேண்டிய வருவாய், மக்கள்தொகை இவற்றையெல்லாம் கணக்கிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பரிந்துரையை அரசுக்கு அனுப்பி வைத்தால் அதை ஆய்வு செய்யலாம்.

முன்னுள் திருவிதாங்கூர் — கொச்சியிலிருந்து மாற்றல் பெற்ற பணியாளர்கள்

* 744 வினு—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) States Re-organisation காரணமாக திருவிதாங்கூர்-கொச்சி அரசிலிருந்து தமிழ்நாடு அரசுக்கு மாற்றப்பட்ட குழித்துறை நகரமன்ற ஊழியர்கள் G. O. Ms. No. 103, R. D. & L. A., dated 29-1-75ஞல் பென்ஷன் கிராஜுவிட்டி ஆகியவைகளில் பாதிக்கப்பட்டு உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அப்படியாஞல், மேற்படி G. O. வை மறுபரிசீலனை செய்ய உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. காளிமுத்து (அ) மற்றும் (ஆ) பல்வேறு நிலைமைகளையும் நன்கு ஆராய்ந்த பின்னரே அரசுமுடிவெடுத்தது. இதை மறுபரிசீலனை செய்யும் அவசியம் இல்லை.

திரு. தே. ஞானசிகாமணி: தலைவர் அவர்களே, குமரி மாவட்டம், திருவிதாங்கூர்-கொச்சியோடு இருந்த நேரத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கு இருந்த இந்தச் சலுகை தமிழகத்தில் சேர்ந்ததற்குப்பின்ஞல் மறுக்கப்படுகிறது. கேரளத்தில்இவர்களுக்கு கிராஜுயுட்டி, பென்ஷன் முதலியவை கொடுக்கப்படுகிறது. ஆகவே இதை மீண்டும் பரிசீலனை செய்து நல்ல முடிவுகளை எடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து; இதில், மொத்தத்தில் 12 பேர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை இது. இதைத் திட்டவட்டமாக ஆராய்ந்து ஆணை பிறப்பிக்கப்பட்டது, இன்னும் மறுபரிசீலனை